BEFORE THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE Cum ~~SPECIAL JUDGE, KANYAKUMARI @ NAGERCOIL~~

# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

8082851

C

1. District மாவட்டம்: KANYAKUMARI  PS காவல்நிலையம்: Vigilance and Anti-Corruption, Kanyakumari  Year ஆண்டு: 2023  FIR No. மு.த.அ. எண்: 01  Date நாள்: 17.03.2023

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 as amended in 2018  Sections பிரிவுகள்: 7
   (ii) Act சட்டம்: -  Sections பிரிவுகள்: -
   (iii) Act சட்டம்: -  Sections பிரிவுகள்: -
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 16.03.2023  Date from : நாள் முதல் -  Date to : நாள் வரை -
   Time Period : நேர அளவு Before 20.00 Hrs on 16.03.2023  Time from : நேரம் முதல் -  Time to : நேரம் வரை -
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 17.03.2023  Time நேரம் : 11.00 Hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 17.03.2023  Time நேரம் :

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் Sub-Registrar Office, Kottaram About 15 kms East.
   Beat Number : முறைக் காவல் எண் -  (b) Address : முகவரி -
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் -  District : மாவட்டம் -

6. Complainant /Informant (a) Name குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்: Tr. V.K. Sunilkumar  (b) Father's/ Husband's Name தந்தை / கணவர் பெயர்: Tr. Kumaradhas
   (c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு: 38/2023  (d) Nationality : நாட்டினம் Indian  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்  Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் Taluk Supply Officer, Kalkulam  (g) Address முகவரி Kalkulam Taluk, Kanyakumari District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   Tr. A. Anvar Ali aged 49/2023. S/o A. Asan Ali, Assistant, i/c Sub-Registrar, Kottaram Sub-Registrar Office, Kanyakumari District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Seprate Sheet enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at Item No.2 registered the case and took up the investigation / directed H.S. John Bi[illegible] Rank Inspector to take up the Investigation / Refused Investigation / transferred to PS ........................ on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ........................ பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

17/3/23

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

17/3/2023

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
17-03-2023 at 13.30 hrs.

Name: பெயர் G. HECTOR DHARMA RAJ
Rank: நிலை Deputy Supdt. of Police No. எண் ........
Vigilance and Anti-Corruption
Kanyakumari
@ Nagercoil.

கன்னியாகுமரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 1/2023 முதல் தகவல் அறிக்கை வரிசை எண் 12 –ன் இணைப்பு.

மதிப்பிற்குரிய அய்யா,

| | |
|---|---|
| குற்ற அலுவலர் :-<br><br>திரு.A.அன்வர் அலி, வயது-49/23,<br>த/பெ. A.அசன்அலி,<br>உதவியாளர்,<br>சார்பதிவாளர் பொறுப்பு,<br>கொட்டாரம் சார்பதிவாளர் அலுவலகம்,<br>கன்னியாகுமரி மாவட்டம். | பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது :- இன்று 17.03.2023 காலை 11.00 மணிக்கு கன்னியாகுமரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணை காவல் கண்காணிப்பாளர் G.ஹெக்டர் தர்மராஜ் ஆகிய நான் நிலையத்தில் பணியிலிருந்த போது திரு.V.K.சுனில்குமார், வட்ட வழங்கல் அலுவலர் கல்குளம் தாலுகா கன்னியாகுமரி மாவட்டம் அவர்கள் நிலையம் ஆஜராகி ஒரு புகார் மனுவுடன், கொட்டாரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் கைபற்றப்பட்ட ஆவணங்கள், செயல்முறை நடவடிக்கை நாள்.16.03.2023 மற்றும் ரூ.41,000/-ஆகியவற்றை இணைத்து நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொண்டார். |

அந்த புகார் மனுவின் விபரம் பின்வருமாறு:-அனுப்புநர் திரு.V.K.சுனில்குமார், வட்ட வழங்கல் அலுவலர், கல்குளம் வட்டம், கன்னியாகுமரி மாவட்டம். பெறுநர் துணை காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, கன்னியாகுமரி பிரிவு, நாகர்கோவில். அய்யா, நான் 16.03.2023-ம் தேதி எனது அலுவலகத்தில் பணியிலிருந்தபோது மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் பொது அவர்களது உத்தரவின்படி மாலை சுமார் 17.00 மணிக்கு நாகர்கோவில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலகத்திற்கு திடீர் தணிக்கைக்கு அரசு சாட்சியாக பணிபுரிய வந்து நாகர்கோவில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை துணை காவல் கண்காணிப்பாளர் அவர்களை நேரில் சென்று சந்தித்தேன். அப்போது அவர் என்னிடம் கன்னியாகுமரி மாவட்டம், கொட்டாரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் திரு.அ.அன்வர் அலி என்பவர் பொறுப்பு சார்பதிவாளராக பணிபுரிந்து வருவதாகவும், அவர் மேற்படி சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திர பதிவுக்கு வரும் பொதுமக்களிடமிருந்து சம்பந்தப்பட்ட பத்திர எழுத்தர்கள் மூலமாகவும் மற்றும் தனிநபர் திரு.செண்பக சுப்பிரமணியம் மூலமாகவும் அலுவலக நேரம் முடிந்து, அலுவலகத்தை விட்டு வெளியே

செல்லும்பொழுது கையூட்டாக பணம் பெற்று கொட்டாரம் ஜங்ஷனிலிருந்து ஆட்டோ வாடகைக்கு பிடித்து அதன் மூலம் வீட்டுக்கு லஞ்ச பணத்துடன் செல்வதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில் மேற்படி சார்பதிவாளரை திடீர் தணிக்கை செய்ய வேண்டும் என்று விளக்கினார்கள். அதன்படி 16.03.2023 ம் தேதி மாலை சுமார் 17.30 மணிக்கு நானும் கன்னியாகுமரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை துணை காவல் கண்காணிப்பாளர் அவர்களும் மற்றும் காவல் ஆய்வாளர்கள் திருமதி.C.சிவசங்கரி, திருமதி.T.T.ரெமா மற்றும் போலீஸ் பார்ட்டியினர் ஆகியோர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை அலுவலகத்தில் இருந்து அரசு வாகனங்கள் TN-21-AG 0777 மற்றும் TN-22 G 0470 ஆகியவைகளில் புறப்பட்டு மாலை சுமார் 18.00 மணிக்கு கொட்டாரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்து சுமார் 1 கிமீ தூரம் உள்ள அகஸ்தீஸ்வரம் செல்லும் பாதை ஜங்ஷனில் வாகனங்களை மறைவாக நிறுத்தி விட்டு சார்பதிவாளர் அலுவலகம் வந்து ரகசியமாக கண்காணித்து வந்தோம். இரவு சுமார் 19.15 மணிக்கு மேற்படி அலுவலகத்தில் இருந்து மூன்று பெண்கள் ஒரு ஆட்டோவில் ஏறி சென்றார்கள். பின்னர் சுமார் 15 நிமிடங்கள் கழித்து கருநீல நிற முழு கைசட்டையும், இளம் சாம்பல் நிற பேண்டும் போட்ட சார்பதிவாளர் அன்வர் அலியும் அவருடன் செண்பக சுப்பிரமணியனும் அலுவலகத்தையும், வெளி கேட்டையும் பூட்டி விட்டு வெளியே வந்தார்கள். அப்பொழுது சார்பதிவாளரை வெளிநபர் யாரும் சந்திக்கவில்லை. மேற்படி அன்வர் அலி மற்றும் செண்பகசுப்பிரமணியன் என்பவர்களின் விபரத்தை துணை காவல் கண்காணிப்பாளர் மூலம் தெரிந்து கொண்டேன். அதன்பிறகு அங்கு இருசக்கர வாகனததில் வந்த வெள்ளை நிற சட்டை அணிந்த நபருடன் சார்பதிவாளர் ஏறி சென்றார். அவர்களை செண்பக சுப்பிரமணியனும் தன்னுடைய இருசக்கர வாகனமான TN74BB 7642 என்ற எண் கொண்ட ஜீபிடர் வாகனத்தில் பின்தொடர்ந்து சென்றார். மேற்படி சார்பதிவாளர் திரு.அன்வர்அலி கொட்டாரம் சார்பதிவாளர் அலுவலகம் முன்னால் வைத்து பணம் வாங்கவில்லை எனவே ரகசிய தகவல் அளித்தவரை துணை காவல் கண்காணிப்பாளர் தொடர்பு கொண்டு கேட்ட பொழுது அவர் தான் கொட்டாரம் ஜங்ஷனில் நிற்பதாகவும், தற்பொழுது தான் சார்பதிவாளர் அன்வர் அலி கொட்டாரம் ஜங்ஷனில் வைத்து இரண்டு நபர்களிடம் பேசி விட்டு JEYA MANI என்று ஆங்கிலத்தில் பின் கண்ணாடியில் எழுதப்பட்ட மற்றும் நம்பர் எழுதபடாத ஆட்டோவில் ஏறி நாகர்கோவில் நோக்கி செல்வதாகவும் தெரிவித்தார். உடனே நாங்கள் வாகனத்தில் ஏறி கொட்டாரம் ஜங்ஷன் சென்று அங்கிருந்து நாகர்கோவில் செல்லும் ரோடில் பின் தொடர்ந்ததில் மேற்படி ஆட்டோவை அச்சன்குளம் பொற்றையடி இடையில் உள்ள ஸ்ரீவிநாயகா கம்பியூட்டர் எடை மேடை அருகில் வைத்து நிறுத்தி ஆட்டோவின் உள் கரு நீல நிற சட்டை

அணிந்த நபரிடம் நான் எங்களை அறிமுகம் செய்து விட்டு அவருடைய பெயர் மற்றும் வேலை என்னவென்று கேட்க அவர் தன்னுடைய பெயர் அன்வர் அலி என்றும், தான் கொட்டாரம் சார்பதிவக பொறுப்பு சார்பதிவாளராக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். அந்த இடம் நாகரகோவில் கன்னியாகுமரி மெயின் சாலை என்பதாலும் அதிக இருட்டாக உள்ள இடம் என்பதாலும் சார்பதிவாளரை தணிக்கை செய்ய அந்த இடம் ஏதுவாக இல்லாததாலும் அதே ஆட்டோவிலே சார்பதிவாளரை நானும் துணை காவல் கண்காணிப்பாளரும் அழைத்து கொண்டு வந்து கொண்டிருக்கும்போது அவரிடம் சார்பதிவாளர் அலுவலகத்தை திறக்க துணை காவல் கண்காணிப்பாளர் கேட்டு கொண்டதன் பேரில் அவர் சுமார் 19.48 மணிக்கு தன்னுடைய செல்போன் எண்.9894699108ல் இருந்து செண்பக சுப்பிரமணியத்தின் 8220120843க்கு அழைத்து சார்பதிவாளர் அலுவலகத்தை திறக்க கேட்டுகொண்டார். பின்னர் இரவு சுமார் 8 மணிக்கு நாங்கள் சார்பதிவாளருடன் கொட்டாரம் சார்பதிவாளர் அலுவலகம் வந்து செண்பக சுப்பிரமணியன் மூலம் வெளிப்புற கேட் மற்றும் அலுவலக கதவை திறந்து சார்பதிவாளரை அவருடைய அறைக்கு அழைத்து வரப்பட்டார். பின்னர் என்முலம் சார்பதிவாளர் திரு.அன்வர் அலியை சோதனை செய்த பொழுது அவர் அணிந்திருந்த இளம் சாம்பல் நிற பேண்டின் வலது பக்க பாக்கெட்டில் ரூபாய் நோட்டுக்கள் கத்தையாக காணப்பட்டது. அவைகளை எடுத்து பார்த்தில் ரூ.500 நோட்டுக்கள் 40 எண்ணங்களாக ஒரு ரப்பர் பேண்ட் போடப்பட்ட நிலையிலும், இன்னொரு ரூ.500 நோட்டுக்கள் 40 எண்ணங்களாக ஒரு ரப்பர் பேண்ட் போடப்பட்ட நிலையிலும், தனியாக ரூ.500 நோட்டும் இரண்டு ரூ.200 நோட்டும் மற்றும் ஒரு ரூ.100 நோட்டுமாக மொத்தம் ரூ.41,000/- காணப்பட்டது. மேற்படி பணம் குறித்து சார்பதிவாளர் திரு.அன்வர் அலியிடம் கேட்டதற்கு இந்த பணம் தன்னுடைய சொந்த பணம் என்றும், தான் வீட்டில் இருந்து கொண்டு வந்ததாகவும் தெரிவித்தார். கொட்டாரம் சார்பதிவக தனிநபர் பண இருப்பு பதிவேடு நாள் 16.03.2023 பார்வையிட்டதில் சார்பதிவாளர் ரூ.1000 கொண்டு வந்ததாக எழுதியுள்ளார். மேலும் மேற்படி பதிவேடை பார்வையிட்டதில் அவர் இந்த சார்பதிவகத்தில் பொறுப்பு ஏற்று பணிபுரிந்த 16.02.2023 முதல் தினமும் ரூ.1000 தன்னுடைய சொந்த பணம் கொண்டு வந்துள்ளதாக எழுதப்பட்டுள்ளதில் இருந்து அவர் தான் ரூ.1000 இன்று கொண்டு வந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளது ஏற்று கொள்ள கூடியதாக இல்லை. மேலும் சார்பதிவாளரின் வலது பேண்ட் பாக்கெட்டில் இருந்த ரூபாய் ரூ.41,000/- அவர் வீட்டில் இருந்து கொண்டு வந்தேன் என்று சொல்வது ஏற்று கொள்ள கூடியதாக இல்லாததால் மேற்படி பணம் என்னால் கைப்பற்றப்பட்டது. மேலும் அவரை சோதனை செய்த போது அவர் அணிந்திருந்த பேண்டின் வலது பக்க பாக்கெட்டில் இரண்டாக மடித்த நிலையில் இருந்த கருப்பு நிற மணிப்பர்ஸை எடுத்து சோதனை செய்த போது அதில் அவருடைய ஓட்டுநர் உரிமம்

எண்.TN7420220002228 –ன் நகல் காணப்பட்டது. மேலும் மணிப்பர்ஸின் இரண்டாவது அறையில் 100 ரூபாய் நோட்டுகள் காணப்பட்டது. அவற்றை எடுத்து எண்ணிப்பார்த்த போது நான்கு 100 ரூபாய் நோட்டுகள் காணப்பட்டது. இந்த பணத்தை பற்றி அவரிடம் கேட்டபோது தனது செலவுக்காக வைத்திருந்த பணம் என்று தெரிவித்தார். அந்த பணம் ரூ.400-ஐ அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. மேலும் மணிப்பர்ஸை சோதனை செய்த போது அதிலிருந்த சிறிய அறையில் மடித்து வைக்கப்பட்டிருந்த நிலையில் இரண்டு துண்டு சீட்டு பேப்பர்கள் காணப்பட்டது. அதில் ஒரு துண்டு சீட்டில் கிருஷ்ண 500 மற்றும் ஏழு பெயர்கள் குறிப்பிட்டு அதில் பண விபரம் எழுதி மொத்தம் 28,000/-ல் பி என ரூ.400 குறிப்பிட்டு 27,600/- என எழுதப்பட்டிருந்தது. இந்த துண்டு சீட்டு குறித்து சார்பதிவாளரை கேட்க தனக்கு அதுகுறித்து தெரியாது என சொன்னார். இதுசம்மந்தமாக திரு.செண்பக சுப்பிரமணியம் என்பவரிடம் கேட்ட போது மேற்படி துண்டு சீட்டில் எழுதப்பட்ட பண விபரங்கள் தன்னால் எழுதப்பட்டது என்றும், மேற்படி பணம் சார்பதிவாளர் அலுவலக செலவுக்காக பத்திர எழுத்தர்களிடம் தன்னால் பெறப்பட்டதுதான் என்றும் கூறினார். மேலும் மற்றொரு துண்டு சீட்டில் ராஜகோபா 2000 மற்றும் 12 பெயர்கள் குறிப்பிட்டு அதில் பண விபரம் எழுதி இருந்தது. இந்த துண்டு குறித்து சார்பதிவாளரை கேட்க தனக்கு அது குறித்து தெரியாது என சொன்னார். மேற்படி இரண்டு துண்டு சீட்டுகள் மற்றும் ஓட்டுநர் உரிமம் ஜெராக்ஸ் நகல் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் இன்று கொட்டாரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட பத்திரங்கள் குறித்து சார்பதிவாளரிடம் கேட்க அவர் கணிணியில் இருந்து ஒரு விபரம் எடுத்து ஆஜர் செய்தார். அதனை பார்வையிட்டதில் 30 பத்திரங்கள் பல தலைப்புகளில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த கணிணி பதிவு நகல் (2023 மாதம் மார்ச் எ கணக்கு கொட்டாரம் நாள் 16.03.2023) வழக்கு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. 16.03.2023 தேதிய கொட்டாரம் சார்பதிவக வருகை பதிவேடை பார்வையிட்டதில் சார்பதிவாளர் திரு.அன்வர் அலி மற்றும் இளநிலை உதவியாளர் திரு.சந்தோஷ்குமார் ஆஜரில் இருந்தமைக்கு சுருக்கொப்பங்கள் இட்டுள்ளனர். மேற்படி வருகை பதிவேடில் துணை ஆய்வு குழு அலுவலரான நான் seen என்று எழுதி கையொப்பமிட்டேன். மேலும் கொட்டாரம் சார்பதிவாளர் அலுவலகத்தை பார்வையிட்டதில் அரசு ஆணை மற்றும் மாண்புமிகு உயர் நீதிமன்ற ஆணைப்படி லஞ்சம் பெறுவதும் கொடுப்பதும் குற்றம் என்றும் லஞ்சம் குறித்தான புகார்கள் தெரிவிக்க வேண்டிய தொலைபேசி எண்கள் அடங்கிய போர்டு மேற்படி அலுவலகத்தில் காணப்படவில்லை. இதுகுறித்து சார்பதிவாளர் திரு.அன்வர் அலியை கேட்டதில் மேற்படி போர்டு தங்கள் அலுவலகத்தில் வைக்கப்படவில்லை என்று ஒப்பு கொண்டார். சார்பதிவாளர் கொட்டாரத்தில் இருந்து ஏறி சென்ற

ஆட்டோ ஓட்டுனரான த.மணிகண்டன் என்பவரிடம் நடந்த விபரங்களுக்கு ஒரு வாக்குமூலம் பெறப்பட்டது. அவருக்கு எழுத தெரியாததால் அவர் சொல்ல சொல்ல திரு.செண்பக சுப்பிரமணியன் மூலம் வாக்குமூலமாக எழுதினார். அந்த வாக்குமூலத்தில் துணை ஆய்வு குழு அலுவலரான நான் Before me என்று எழுதி கையொப்பம் செய்தேன். இதன்மூலம் கொட்டாரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பொறுப்பு சார்பதிவாளராக உள்ள திரு.அ.அன்வர் அலி என்பவர் மேற்படி சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திர பதிவுக்கு வரும் பொதுமக்களிடமிருந்து சம்பந்தப்பட்ட பத்திர எழுத்தர்கள் மூலமாகவும் மற்றும் தனிநபர் திரு.செண்பக சுப்பிரமணியம் மூலமாகவும் அலுவலக நேரம் முடிந்து, அலுவலகத்தை விட்டு வெளியே செல்லும்பொழுது கையூட்டாக பணம் பெறும் குற்றச்செய்கையும் புலனாகிறது. மேலும் பொது ஊழியரான கொட்டாரம் சார்பதிவாளர் திரு.அன்வர் அலி லஞ்சம் பெற்று குற்றமுறு நடவடிக்கையில் (Criminal Misconduct) ஈடுபட்டு வருவது தெரியவருகிறது. எனவே கைப்பற்றப்பட்ட லஞ்சப்பணம் ரூ.41,000/- ஆவணங்கள் மற்றும் செயல்முறை நடவடிக்கை ஆகியவற்றை தக்க மேல்நடவடிக்கைக்காக எனது இந்த புகார் மனுவுடன் தங்களுக்கு சமர்ப்பிக்கிறேன். இப்படிக்கு திரு.V.K.சுனில்குமார், வட்ட வழங்கல் அலுவலர், கல்குளம் வட்டம், கன்னியாகுமரி மாவட்டம். Sir, Received by me on 17.03.2023 at 11.00 hrs and registered a case in Kanyakumari Vigilance and Anti-Corruption Cr.No.1/2023 u/s. 7 of Prevention of Corruption Act 1988 as amended in 2018 against Tr.A.Anver Ali on 17.03.2023(today) at 12.00 hrs S/d DSP 17.03.2023, (G.HECTOR DHARMA RAJ), Deputy Supdt of Police, Vigilance and Anti-Corruption, Kanyakumari @ Nagercoil.

The original FIR along with the complaint, Proceedings dated 16.03.2023 prepared at the office of sub registrar Kottaram on 16.03.2023 between 20.00 hrs and 23.50 hrs, Seized amount of Rs.41,000/-, seized documents, statement of Tr.Manikandan were sent to the Chief Judicial Magistrate cum Special Judge, Kanyakumari District @ Nagercoil for the trial offences under PC Act cases and the copies sent to the concerned officers.

Dharmaraj
17/3/2023
(G.HECTOR DHARMA RAJ)
Deputy Supdt. of Police
Vigilance and Anti Corruption
Kanyakumari Detachment
@ Nagercoil